Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

## முச்சந்தி முரளி



"ஒரு மாதிரி காதலர் தினத்தில மனோவின்ர கூட்டணியை சஜித் மடக்கிப்போட்டார் பாருங்கோ"

# உதயன்

சுடர் : 39
கதிர் : 81
வியாழக்கிழமை
15 பெப்ரவரி 2024
மாசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



### யாழ். இணுவிலில் நேற்றுமாலை பயங்கரம்

# வாகனத்தில் சென்ற குடும்பத்தை சின்னாபின்னமாக்கியது ரயில்!

### இளந்தொழிலதிபரும், 3 மாதக் குழந்தையும் சாவு மனைவி படுகாயம்

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 15**

**குடும்பம் ஒன்று பயணித்த வாகனம் ரயிலுடன் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரது மனைவியும், 3 மாதக் குழந்தையும் படுகாயமடைந்த நிலையில், குழந்தை மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது உயிரிழந்தது. இந்த விபத்து யாழ்ப்பாணம், இணுவிலில் நேற்றுமாலை நடந்துள்ளது. காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதிய வாகனம் சின்னாபின்னமாகச் சிதைந்தது.**

11

## வேட்டைக்குச் சென்றவரை பலியெடுத்த கட்டுத்துவக்கு

முல்லைத்தீவு, பெப்.15

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புக் காட்டுப் பகுதிக்குள் வேட்டைக்குச் சென்ற ஒருவர் கட்டுத்துவக்கு வெடித்ததால் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. முல்லைத்தீவு, ஆறுமுகத்தான்குளத்தைச் சேர்ந்த துரைராசா ஆனந்தராசா (வயது-48)

11

## பிரபுக்களை அழிக்கவே பிரபாகரன் போராடினார்

### டலஸின் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப்.15

பிரபுக்களின் ஆதிக்கத்துக்கு எதிராகவே வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட பிரபுக்கள் அல்லாத நான்கு தலைவர்கள் நாட்டில் கிளர்ந்தெழுந்தனர் என்று கூறியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.

11

## இ.போ.ச. பஸ் மோதி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.15

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த

11



## சூழ்ச்சிகளை முறியடித்து மாநாட்டை நடத்துங்கள்!

### சிறீதரனுக்கு சம்பந்தர் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப்.15

உட்கட்சிச் சூழ்ச்சிகளை முறியடித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை உடனடியாக

11

## டிசெம்பர் மாதம் உயர்தரப் பரீட்சை

கொழும்பு, பெப்.15

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில்

11

## தேர்தல் நிச்சயம்; ரணிலே லட்சியம்!

### பெரமுன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.15

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குவேன் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுனக் கட்சி யாரை வேட்பாளராக முன்னிறுத்துவது என்பது தொடர்பாக எந்த

11

## பீடி இலைகளைக் கடத்தியோர் கைது

மன்னார், பெப்.15

ஆயிரத்து 177 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் புத்தளம், சின்னப்பாடு கடற்பரப்பில் வைத்து 4 சந்தேக நபர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

11

## காதலர் தினத்தில் சஜித்துக்கு "ஓகே"

### சம்மதித்து ஒப்பமிட்டார் மனோ

கொழும்பு, பெப்.15

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தெற்கு அரசியலில் பிரதான அரசியல் கட்சிகள் காய் நகர்த்தல்களில் ஈடுபட்டுவரும் நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும், தமிழ் முற்போக்குக்

11

## வெளிநாட்டு ஆசைகாட்டி மோசடி கனேடிய அதிகாரிகள் களத்தில்!

யாழ்ப்பாணம், பெப்.15

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி மோசடி செய்யும் சம்பவங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள நிலையில், கனேடியத் தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

11

### நிகழ்நிலைக் காப்புச் சட்டம்;

## ரணிலுக்கு இடித்துரைத்த அமெரிக்காவின் சமந்தா

கொழும்பு, பெப்.15

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் தலைவர் சமந்தா பவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று நடந்துள்ளது.

11



## தேர்தலுக்கு நிதி "ரெடி"

கொழும்பு, பெப்.15

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நிதி ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படாது. ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இந்த வருடம்

11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நேற்றும் பணிப்புறக்கணிப்பு!

வெளிநோயாளர் பிரிவினர், கிளினிக் என பல்லாயிரம் நோயாளர்கள் பெரும் நெருக்கடி!

**கொழும்பு, பெப். 15**

**ஊதிய உயர்வு, மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, 72 சுகாதாரத் தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் கடந்த இரண்டு நாள்களாக முன்னெடுக்கும் போராட்டத்தால் தேசிய அளவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் மருத்துவத் தேவையை நிவர்த்திக்க முடியாமல் பெரும் அவதிக்குள் தள்ளப் பட்டனர்.**

நாடெங்கிலுமுள்ள அரச மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுகள், பரிசோதனைக் கூடங்கள், மற்றும் கிளினிக் பிரிவுகள் உள்ளிட்ட பெரும்பாலான மருத்துவப் பிரிவுகள் கடந்த இரண்டு நாள்களாக முடக்க நிலையை எதிர்கொண்டமையால் பொதுமக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டமையை அவதானிக்க முடிந்தது. போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக, சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து ஜனாதிபதி ரணிலால் நேற்றுமுன்தினம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-19)

## மருந்து ஒழுங்குபடுத்தல் உறுப்பினர்கள் விலகல்!

கொழும்பு, பெப். 15

தேசிய மருந்து வகைகள் ஒழுங்குபடுத்தல் பணிப்பாளர் சபையிலுள்ள உறுப்பினர்கள் மூன்று பேர் தமது பதவிகளைக் கடந்த திங்கட்கிழமை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இவர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் கையளித்துள்ளனர். இருப்பினும் என்ன காரணத்துக்காக அவர்கள் பதவி விலகினர் என்பது தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. (ப-6)


**காணவில்லை**

சுண்டுக்குளி பகுதியில் பிறவுண் கருப்பு நிறத்தை கொண்ட பொமினேறியன் நாயை காணவில்லை கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு: **076 865 4165**


## நவீன தொழில்முறைக்கு உகந்த சமூக உருவாக்கம்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

பரீட்சைகளின் சுமைகளைக் குறைத்து ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களை கல்வி முறையில் உள்வாங்கி தொழில் முறைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம் இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விமறுசீரமைப்பின்ஊடாக நாட்டில் புதிய கல்வி முறையொன்றை உருவாக்க வேண்டும். உலகுக்குப் பொருத்தமான தொழில் படையினை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தவேண்டும். நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்துவதற்காக கல்வி முறையை உலகுக்குப் பொருத்தமான வகையில் மாற்றியமைக்கவேண்டும்.



அதன் மூலம் உலகுக்குத் தேவையான தொழில் படையை உருவாக்க முடியும் - என்றார். (ம-44)


**மணமகள் தேவை**


யாழ். இந்து கௌரவ குடும்பம், 1998ல் பிறந்த, பூர நட்சத்திரம், தனியார் நிறுவனமொன்றில் கடமைபுரியும் மணமகனுக்கு. மணமகள் தேவை

(Cs/278884)

தொடர்பு:- **075 045 8213** (தந்தை)


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1940



மறைவு 13 . 02 . 2024

**காராளசிங்கம் நாகலிங்கம்**

(இளைப்பாறிய பொறுப்பதிகாரி அளக்கும் அலகுகள் தராங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்)

புலோலியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் நாகலிங்கம் அவர்கள் 13.02.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காராளசிங்கம் தெய்வானையம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான, இராமநாதன் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற உதயேஸ்வரியின் அன்புக் கணவரும் குலசிங்கம், சிவலிங்கம், சிவராஜசிங்கம், அமரர் சோதிலிங்கம், அமரர் மகாலக்ஷ்மி, அமரர் விஜயலக்ஷ்மி, அமரர் தனலக்ஷ்மி, அன்னலக்ஷ்மி, ராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜேஸ்வரன் (லண்டன்), ரமேஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ராதிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநந்தினி, பிரபாகரன், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஷனா, அஸ்வின், சரண்யா, சரண், கவிசாயி, சேசாயி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள், இன்று 15.02.2024 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை, இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சுழிபுரம் மத்தி,**
**சுழிபுரம்.**


தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 27908) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம:

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 08 . 1950



உதிர்வு 14 . 02 . 2024

**இரவீந்திரன் வேணுகோபால்**

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேணுகோபால் இரவீந்திரன் அவர்கள் நேற்று (14.02.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேணுகோபால் பத்தர் - கனகவள்ளி தம்பதியினரின் புதல்வனும், துரையப்பா பத்தரின் பேரனும், சுப்பிரமணியம் - தெய்வரட்ணம் தம்பதியினரின் மருமகனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும், பிரதீபன் (பிரான்ஸ்), அனோஜன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், சிவகாமி காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் மகேந்திரன், யோகேந்திரன், லீலா, கோகிலம், சாந்தி, மல்லிகா, ஆனந்தி, செல்வம், அலோசியஸ், சரஸ்வதி, கலாரஞ்சனி, காயத்ரி, பவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராதாகிருஸ்ணன் மற்றும் நந்தகுமார், லீலாவதி, வசந்தாதேவி, ரவீந்திரகுமார், தர்மராஜா, காலஞ்சென்ற பாரிவேல் மற்றும் சந்திரசேகர், செல்வச்சந்திரன், நிரஞ்சலா, நவலட்சுமி, நவரட்ணராஜா, மயூரவாகன், தில்லைநாதன், செல்வநாதன் ஆகியோரின் மைத்துனரும், பிரசன்னா, சரண்யன் (லண்டன்), சோபிதா, கனிஸ்ரா, ஸ்ரீனுஜா ஆகியோரின் பெரியதகப்பனும், மாலதி, யசோதா, வரதராஜன், ரகுபதிராஜன், கோவிந்தராஜன், வத்சன், சிந்துஜா (லண்டன்), தர்சன், கௌசன், கம்சிதா, நிவேனுதன், சந்தோஷினி, நிவாஸினி ஆகியோரின் மாமனாரும், சிவகுமார், பிரியதர்ஸினி, சிவதர்ஸினி, ராஜன் ஆகியோரின் சிறிய தந்தையும், வனஜா, சதீஸ்வரன், வினோத், சுமேதா, திவ்யா, பிரசன்னா, கார்த்தி, அபிராமி, அஸ்வின் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பில்லி வீதி, கூறாவத்தை,**
**சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 600 6569 (சித்தப்பா)**

(CS 27904) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை ஆக்கிரமித்தோர் வீடுகட்ட அனுமதிக்காதீர்கள்

## புதுக்குடியிருப்பு பிரதேசசெயலரிடம் முறைப்பாடு

**முல்லைத்தீவு, பெப். 15**

**முல்லைத்தீவு, தேராவில் குளத்தின் அருகில் காணிகளைப் பிடித்திருப்பவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்க அனுமதி வழங்கவேண்டாம் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் முறையிடப்பட்டுள்ளது.**

போர்க்காலத்தில் குளத்தை அண்மித்து குடியிருந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் மீள்குடியேற்றத்தின் போது வழங்கப்பட்டன.

தற்போது தேராவில் குளத்தின் நீர்வெளியேறும் பாதையிலும் பலர் காணிகளை அடாத்தாகப் பிடித்துள்ளனர். இவர்களுக்கு நிரந்தரக் கட்டுமானங்களுக்கான அனுமதியை பிரதேச செயலகம் வழங்கும் பட்சத்தில் தேராவில் குளத்தின் நீரிருப்பு அதனால் பாதிக்கப்படும். ஆதலால் அவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்க அனுமதி வழங்கக்கூடாது. அவ்வாறு அடாத்தாகக் குடியிருப்பவர்களுக்கு வேறு பகுதிகளில் காணிகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் பிரதேசசெயலரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-13)

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்., பெப். 15

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு பகுதிகளில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் கடந்த திங்கட்கிழமை கைதான இருவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவுபிறப்பித்துள்ளது.

இளவாலை பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சண்டிலிப்பாய் மற்றும் மாதகலைச் சேர்ந்த இருவரை 59 மில்லிகிராம் மற்றும் 150 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன்கடந்த திங்கட்கிழமை இளவாலை பொலிஸார் கைது செய்திருந்தனர். இரு சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஒ-125)

## சி.வெங்காயத்துக்கு இலவசக் காப்புறுதி?

கொழும்பு, பெப். 15

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்துக்கு இலவசமாக காப்புறுதி வழங்குவதற்கு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த ஆண்டில் இலங்கையின் சின்ன வெங்காய உற்பத்தியை மீண்டும் அதிகரிப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. காட்டு யானைகளினால் ஏற்படும் பாதிப்புகள், வரட்சி மற்றும் அதிக மழை போன்ற காரணங்களால் ஏற்படும் தாக்கங்களுக்காகவும் இந்தக் காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

போதை மாத்திரையுடன்

## கைதானார் மருத்துவர்!

*கொழும்பு, பெப். 15*

*ஆயிரத்து 600 போதை மாத்திரைகளுடன் மருத்துவர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*ஜயமாலபுர பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் அரச மருத்துவமனை ஒன்றில் கடமையாற்றும் மருத்துவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)*



## பயணத்துக்கு இடையூறாக இருந்த நடைபாதைக் கடைகள் அகற்றல்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டுள்ளன.

பொதுமக்களின் சீரான போக்குவரத்துக்கு இந்தக் கடைகளால் இடையூறு ஏற்படுவதோடு, அவற்றால் விபத்துகளும் நேரிடுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே அவை அகற்றப்பட்டன. எனினும் மனிதாபிமானமற்ற முறையில், எவ்வித முன்னறிவித்தலுமின்றி இந்தக் கடைகள் அகற்றபட்டதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச-17)

## திருடப்பட்டபொருள்கள் சிலமணி நேரத்தில் மீட்பு

அச்சுவேலி, பெப். 15

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரின் பெறுமதியான சொத்துகளைத் திருடிய நபர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என அச்சுவேலி குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி கதிரிப்பாயில் நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த திருடன், 8 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றிருந்தார். சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக அதேயிடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரை நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. மதுபோதையில் வீட்டுக்குள் நுழைந்து பொருள்களை திருடியதாக் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். (ஓ-23-66)

## தினம் தெரியுமோ?

**த**னக்கில்லாமல் தானம் செய்யாதே எண்டு எங்கட பழைய ஆக்கள் சொல்லுவினம். ஆனால் தானம் வாங்கிறவையே ஆடம்பரநிகழ்வுகளுக்கு ஸ்பொன்ஸர் குடுக்கினம் எண்டால் ஆருக்கும் அறச்சீற்றம் வரத்தானே செய்யும்.

கிளிநொச்சியில முதல் பெண் அரசாங்க அதிபரா இருந்த றூபவதி கேதீஸ்வரன் அறுபது வயது வந்து, பென்சனில போறா. அதுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில உள்ள பொது அமைப்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு மணிவிழா முந்தநாள் செய்தவை. அந்த மாவட்டத்துக்கு அவா செய்த நல்லகாரியங் களுக்காக இப்பிடி அவாவின்ர ஓய்வுக்காலத்தில நல்லா இருக்கச் சொல்லி வாழ்த்தி அனுப்பத்தானே வேணும். இந்த விழாவுக்கு முந்நூறு பேருக்கும் மேல வந்தவை. பொதுவா இப்பிடியான மணிவிழாக்களுக்கு தொழில் நிறுவனங்கள், கடைக்காரர், பணக்காரர், வெளிநாட்டுக்காரர், அரசியல்வாதிகள் தான் ஸ்பொன்சர் பண்றவை. ஆனால் முந்தநாள் நடந்த மணிவிழாவுக்கு வந்த முந்நூறு பேருக்கும் சாப்பாட் டுக்கான ஸ்பொன்ஸர் ஆரெண்டு தெரியுமோ? கிளிநொச்சி யில உள்ள ஒரு 'மெகா' ஆச்சிரமம் தான்.

இந்த ஆச்சிரமத்துக்கு நிலபுலன்கள் இருந்து அதிலயும் வருமானம் வருகுது. ஆனால் அதுமட்டும் ஆச்சிரமத்துக்கு காணாது தானே. அதைவிட பிள்ளையளும் இஞ்சதான் நிறைய இருக்கினம். ஆச்சிரமக்காரர் அங்க இருக்கிற பிள்ளையளையும் வடிவாக் கவனிக்கினம். இதெல்லாம் ஓகே தான். ஆனால் பிள்ளையளுக்கும், ஆச்சிரமத்துக்கும் வெளிநாட்டில இருந்தும், உள்நாட்டில இருந்தும் ஒவ்வொரு நாளும் ஆக்கள் நன்கொடையளைக் குடுத்துக்கொண்டே இருக்கினம். அப்பிடி நன்கொடை குடுக்கிறவை அங்க உள்ள பிள்ளையள் நல்லாச் சாப்பிட வேணும், நல்லாப் படிக்க வேணும், காசில்லாமல் ஆச்சிரமம் கஷ்டப்படக்கூடாது எண்ட நல்ல நோக்கத்துக்காகத்தான் குடுக்கினம். அப்பிடி ஆரோ பிள்ளையளுக்காகவும், ஆச்சிரம நன்மைக்காகவும் குடுக்கிற நன்கொடையளை இப்பிடி ஒரு மணிவிழாவுக்கு வாறவைக்கு சாப்பாட்டுக்காக குடுக்கினம் எண்டா என்ன அர்த்தம்?

"அவா ஆச்சிரமத்துக்காக நிறைய நன்மைகள் செய்தவா. அதால ஒரு நன்றிக்கடனுக்காக இதைச் செய்தம். ஆச்சிரமத்துக்கு எண்டு வருமானம் இருக்கு. நெல்லு, தேங்காய் எல்லாம் எங்களிட்ட தன்னிறைவா இருக்கு. அதால எங்களுக்கு உந்த விழாவுக்கு முப்பதாயிரம் மட்டிலதான் முடிஞ்சது" எண்டு ஆச்சிரமக்காரர் சொல்லுகினம். (ஒரு பார்சல் 300 ரூபாப்படி 300 பார்சல் திருவையாறில இருக்கிற ஒரு பெண்முயற்சியாளரிட்டத்தான் எடுத்தவை எண்டும் ஒரு கதை ஓடுது. உண்மை பொய் அவைக்குத்தான் தெரியும்.) முப்பதாயிரம் எண்டாலும் அது ஆரோ குடுத்த நன்கொடைக் காசுதானே? அதை ஜீ.ஏ. யின்ர மணிவிழாவுக்காக ஒருத்தரும் ஆச்சிரமத்துக்கு குடுக்கேலையே. அவா ஆச்சிரமத்துக்கு நன்மை செய்தவா எண்டா, ஆச்சிரமப் பிள்ளையள் நேர்ல அவாட்ட போய் வாழ்த்தினாலே, அவான்ர மனம் குளிர்ந்திருக்குமே. அந்தப் பிள்ளைகளின்ர வாழ்த்தைவிட பெறுமதியான பரிசு வேற என்ன இருக்கு? ஆச்சிரமம் இப்ப செய்த வேலை சந்தனம் மிஞ்சினவன் வேற எங்கையோ தடவின கதைமாதிரியெல்லோ இருக்கு.

கிளிநொச்சியில இன்னும் எத்தனையோ ஆச்சிரமங்கள் பிள்ளையளுக்கு சாப்பாட்டுக்கு கூட காசில்லாமல் இருக்கு. இந்த 'மெகா' ஆச்சிரமத்திட்ட காசு மெத்திப்போய் இருந்தால், அந்த ஆச்சிரமப் பிள்ளையளுக்கு குடுத்திருக்கலாமே. அந்தப் பிள்ளையளாவது வயிறாறச் சாப்பிட்டிருக்கும். சிறுவர் இல்லங்களுக்கு நன்கொடையள் குடுக்கிறவை இனியாவது அங்க தேவை இருக்கோ, இல்லையோ எண்டு பாத்துக் குடுக்கிறது நல்லம். 'பாத்திரமறிந்து பிச்சையிடு' எண்டு முன்னோர் சும்மாவோ சொன்னவை.

-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் மீளாய்வு!

யாழ்ப்பாணம், பெப். 15

அராலி தெற்கு கிராமஅலுவலர் பிரிவில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் வாக்காளர் மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கிராமஅலுவலர் அறிவித்துள்ளார்.

பிரிவில் உள்ளவர்கள் குடும்பஅட்டை, அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள், 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதிக்கும் 2008ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கும் இடையில் பிறந்தவர்களின் பிறப்புச் சான்றிதழ் பிரதி உள்ளிட்ட ஆவணங்களைச் சரிவர ஒப்படைப்பதன்மூலம் சிரமமில்லாத பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று அவர் அறிவித்துள்ளார். (ச-555)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்தோற்சவமும் இடம் பெறும் என்று ஆலய ஆதீன கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ச)

★ ★ ★ ★

சுன்னாகம், பெப். 15

சுன்னாகம், வரிசைப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சப்பரத் திருவிழாவும், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.15 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம் பெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

யாழ்ப்பாணம், பெப். 15

புங்குடுதீவு மத்தி பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

# சுயஇழப்பு இறையரசின் படிக்கல்




ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டதும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

இவ்வுலகம் வாழ்வு பெறுவதற்காக இயேசு தன்னையே தியாகப் பலியாக ஒப்படைத்தார். இயேசுவின் சீடர்கள் என்று மார்தட்டிக்கொள்ளும் நாம் அவரைப் போன்று தன்னலம் துறந்து குறிக்கோளை முன்னிறுத்தி சவால்களையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு இயேசுவையும் அவரது வார்த்தைகளையும் பின்பற்றுவதில் நிலையாய் இருக்க வேண்டும். தன்னலம் துறந்து நம் வாழ்க்கைப் போராட்டத்தில் நாள்தோறும் சந்திக்கும் சிலுவைகளை பொறுமையுடன் தூக்கிக்கொண்டு இறுதி இலக்குவரை பயணிப்பதுதான் இயேசுவைப் பின்பற்றுவதற்கான ஆதாயம்மிக்க வழியாகும்.

நாம் என்னதான் செல்வச்செழிப்புடன் ஆடம்பர பளிங்கு மாளிகையில் பகட்டுடன் வாழ்ந்தாலும் கண் இமைக்கும் பொழுதில் வெறுங்கையராய் எம்மை அழைத்துச் செல்லும் மரணத்தை மறவாதிருப்போம். நாம் வாழும்போதே நிலைவாழ்வு என்னும் விண்ணக சொத்தை சொந்தமாக்கிக்கொள்ள பிறரன்பு பகிர்வு அர்ப்பணம் போன்ற புண்ணியங்களில் நிலைத்திருப்போம்.

**எஸ்.யேசுதாஸ்**, கொழும்புத்துறை

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர் பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். விற்பனையும் இலாபமும் எதிர் பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** உற்சாகமாக இருப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வர வாய்ப்புண்டு. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு குடும்பத்தினருடன் பேசி ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**விருச்சிகம் :** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் முயற்சி வெற்றியளிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

# காலத்தால் அழியாத சித்தவைத்தியர் பொன்.இராமநாதன்!



**சித்தவைத்தியர் தியாகராஜா சுதர்மன்,**
*சித்த வைத்தியப்பிரிவு*
*யாழ். மாநகரசபை*

ஈழத்து சித்தமருத்துவ வரலாற்றில், சித்தமருத்துவரும் விரிவுரையாளருமான அமரர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றிய பங்களிப்பு அளப்பெரியது. நூல்களை பணம் கொடுத்து வேண்டுவது அரிதான இன்றைய காலத்தில் அமரர் பொன்னம்பலம் இராமநாதனின் பல நூல்கள் இரண்டாவது பதிப்புப் பெற்றமையானது அவரின் ஆளுமையையும் பெருமையையும் எடுத்தியம்புகின்றன.

1987இல் வெளியான அவரது முதல் நூலான 'சித்த ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கைந்நூல்' கூட முதற்பதிப்பு 1987, 1994 என இரண்டு பதிப்புகளைக் கண்டது.

அவரது நூல்களில் தேடியும் பிடிக்க முடியாத எழுத்துப்பிழைகள், கனதியான புத்தக மட்டைகள், மருந்துகள் செய்வது தொடர்பில் ஒரு மாணவனுக்கு அல்லது மருத்துவனுக்கு சந்தேகம் எழ முடியாதவாறான நூல் உருவாக்கம் என்பன தவறாது அணிசெய்யும். இன்று சித்தவைத்தியர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டு அழுக்கேறி சிதைந்து போகும் நூலாக 'சித்த மருந்துத் துறையியல்' நூலே அமைந்திருக்கின்றன.

கற்பித்தல், மருந்துகளை செய்வித்தல் என எல்லாவற்றிலும் தூய்மையும் நேர்த்தியும் ஓர் ஒழுங்கும் அன்னாரிடம் இருக்கும். பரம்பரை மருத்துவரான வைத்தியர் பொன்.இராமநாதன், தனியார் கல்வி நிறுவனங்கள் மூலமாகவும், யாழ். பல்கலைக்கழகம் மூலமாகவும் பல ஆண்டுகள் சித்தமருத்துவத்துக்கு சேவையாற்றியுள்ளார். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 1997ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர் யாழ்ப்பாணம் மாநகரசபையின் சித்தமருத்துவப் பிரிவில் பணியாற்றினார். போர்க்காலமான அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மருந்துத் தட்டுப்பாடு தீவிரம் பெற்றிருந்தது. இந்த மருத்துவ நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக, தரம்மிக்க மருந்துகளை அவர் தனது தலைமையின் கீழ் உற்பத்தி செய்தார். அப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த மகத்தான பணி, இன்றுவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் முன்னெடுக்கப்படுகின்றது.

*'ஊரெல்லாம் கூடி உரக்க அழுதிட்டுப்*
*பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்*
*சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு*
*நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே'*

திருமந்திரம்

'திருமந்திரத்தில் இலகுவாக அனைவருக்கும் விளங்கக்கூடிய பாடல் இது, ஏன் தெரியுமோ? 'எதுவும் நிரந்தரமில்லை' என்பதை எல்லோரும் விளங்கிக்கொள்ளவேண்டும் என்று திருமூலர் நினைத்திருக்கின்றார். ஆனால் இந்த வார்த்தைகள் காலத்தால் அழியாதவர்களுக்கு பொருந்தப் போவதில்லை. ஒப்பற்ற சித்தமருத்துவரான அமரர் பொன்னம்பலம் இராமநாதனின் நூல்கள் இருக்கும்வரையில் அவர் காலத்தால் அழியாதவரே. அவரது ஆத்மா சிவன்கழல் சேர்ந்து மீண்டும் பிறப்பில்லாப் பேரின்பம் பெற எல்லாம் வல்ல சிவனிடம் வேண்டிக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தந்திரங்கள் நிரந்தரமில்லை


'கொடுங்கோல் அரசன் ஒருவன் அப்பாவிக் குடிமகனைக் கைது செய்து 3 மீற்றர் மாத்திரமே பரப்பளவான தனிச் சிறையில் அடைக்கும் படி கட்டளையிட்டான். நிரபராதியான குடிமகன் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான். 'நான் நிரபராதி, ஏன் என்னைக் கைது செய்தீர்கள் ? ஏன் என்னைச் சிறையில் அடைத்தீர்கள் ?' என்று உரக்கக் கதறினான். பின்னர் அவனை ஒரு மீற்றர் மாத்திரமே அளவுள்ள தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளை வந்தது. மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தான். ஆனால் இம்முறை 'நான் நிரபராதி' என்ற வாதத்தை மறந்து விட்டான். 'இது என்ன கொடுமை? இந்தச் சிறையில் எப்படி இருப்பது? உறங்குவது? அமர்ந்து கொண்டு தானே உறங்க முடியும். இது உங்களுக்கே அநியாயமாகத் தெரியவில்லையா? 'எனக் கதறினான். சினம் கொண்ட அரசன் இன்னும் நான்கு சிறைக்கைதிகளை அவனோடு சேர்த்து அந்தச் சிறிய கூட்டில் அடைத்து விட்டான். இப்போது ஐந்து பேரும் இணைந்து கூக்குரலிட்டனர். 'எங்களால் முடியாது. நாங்கள் மூச்சுத் திணறிச் செத்து விடுவோம். உங்களுக்கு ஈவிரக்கம் எதுவும் இல்லையா? எனப் புலம்பினார்கள். மேலும் சினம் கொண்ட அரசன் ஒரு பன்றியை அவர்களோடு சிறையில் அடைத்து விட்டான். விரக்தியடைந்த அவர்கள், 'நாங்கள் இந்த அசிங்கத்தோடு இந்தச் சிறிய கூட்டில் எப்படி இருப்பது? தயவு செய்து இந்தப் பன்றியை மாத்திரமாவது வெளியே எடுத்து விடுங்கள்' எனக் கெஞ்சிக் கேட்டனர். தயவு காட்டிய சிறைக்காவலர் பன்றியை வெளியே எடுத்தான். அடுத்த நாள் அரசன் அந்தப் பக்கமாக வந்து 'இப்போது உங்கள் நிலை எப்படி ?' என்று கேட்டான். 'நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம். எங்கள் பெரிய பிரச்சினை தீர்ந்து விட்டது' என்று பதில் கூறினார்கள்'

இப்படித்தான் 'பன்றி மையக் கோட்பாடு' நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 'பன்றியை மாத்திரம் எடுத்து விட்டால் போதும்' என்ற கோரிக்கைக்கு எம்மைத் தள்ளி விடுகிறார்கள். அதற்கு முன்னால் இருந்த விவகாரம், அதற்கும் முன்னால் இருந்த மூல விவகாரம் எல்லாம் மறக்கடிக்கப்படுகிறது.

இலங்கையில் அதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் படு கில்லாடி. ஒவ்வொரு விடயத்தையும் மறக்கச்செய்வதற்காக புதுப்புது விடயங்களை கட்டவிழ்த்து விடுவதிலும், ஒரு விடயத்தின் மூலக்கோரிக்கையை நீர்த்துப்போகச் செய்வதிலும் வல்லவராக வலம் வருகிறார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டபோது அதற்குப் பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்ததுடன் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படக் கூடாது என்றனர். அந்தச் சட்டத்தை இலங்கை அரசமைப்பில் உள்வாங்கத் தேவையில்லை என்று போர்க்கொடி தூக்கினர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அவரது அரசாங்கமோ அது பற்றி அலட்டிக்கொள்ளாமல் தன்னிச்சையாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றியது. இதன்போது சட்டத்தை நிறைவேற்றிய முறைமை தவறு, உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உள்வாங்கப்படவில்லை என்று சட்டத்தை வேண்டாம் என்று யார் கோரினார்களோ அவர்களே சட்டம் சரியான முறைமையில் நிறைவேற்றப்படவில்லை என போர்க்கொடி உயர்த்தினர்.

இப்போது அந்தச் சட்டம் தொடர்பில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்களை உள்வாங்குவதாக அரசாங்கம் அறிவித்துவிட்டது. அமைச்சரவையும் அதற்கு அனுமதி கொடுத்து விட்டது. சட்டத்தை வேண்டாம் என்றவர்களை, இறுதியில் சட்டத்தைத் திருத்தினால் சரி என்று சொல்ல வைத்து, அவர்கள் சொன்னதைப்போன்று சட்டத்தையும் அரசாங்கம் திருத்திவிட்டது. எந்தச் சட்டம் வேண்டாம் என்று சொன்னார்களோ அவர்களே இப்போது சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் நிலைமையை ஜனாதிபதி ரணில் உருவாக்கியிருக்கின்றார். இப்படி எப்போதுமே ஒரு சிறிய கோட்டுக்குப் பக்கத்தில் புதிய பெரிய கோடுகளை வரைந்து சிறிய கோடுகளை மறக்கடிக்கும் தந்திரத்தை ரணில் விடாது தொடர்கிறார். ஆனால் எப்போதுமே பன்றிமையக் கோட்பாடும், சிறியகோடு – பெரிய கோடு தந்திரமும் நிலைத்திருப்பதில்லை. அவை என்றோ ஒருநாள் ரணிலைக் கைவிடும்போது கோத்தாபயவை விடவும் அவர் பரிதாபத்துக்குரியவராக, நாட்டு மக்களால் அதிகம் வெறுக்கப்பட்டவராக மாறிநிற்பார்.




# கல்வி முறைமைக்குள் செயற்கை நுண்ணறிவு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 15

**செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடநெறிகளை கல்வி முறைமைக்குள் அறிமுகப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தகவல் மற்றும் தொழில்நுட்ப பாடத் திட்டத்தை கற்பிக்கின்ற 100 ஆசிரியர்களை மைக்ரோசொப்ட் நிறுவனத்தால் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவித்தல் என்ற திருத்தங்களின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இந்த முன்னோடிக் கருத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்படும் பாடசாலைகள் டிஜிற்றல் மயப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பிண்ணாக்குக்கு வரி விதிப்பு: 50,000 பேர் தொழிலிழப்பு

கொழும்பு, பெப். 15

பிண்ணாக்குக்கு வற் அறவிடப்படுவதால் தென்னந்தோட்டங்களில் பணிபுரியும் 50 ஆயிரம் பேர் தமது தொழில்களை இழக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

தெங்கு உற்பத்திகளுக்கு இதுவரை வற் அறவிடப்படவில்லை. ஆனால் இப்போது 18 வீத வற் அறவிடப்படுவதால் தெங்கு உற்பத்தியில் ஈடுபடும் ஆயிரத்து 200 நிறுவனங்கள் தமது உற்பத்தியைக் குறைத்துள்ளன. இதனால் தெங்கு உற்பத்தித்துறையில் பணிபுரிபவர்களுக்கு வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே தொழில் வாய்ப்புக் கிடைக்கிறது. அத்துடன், பிண்ணாக்கின் விலை அதிகரித்தமையால் பிண்ணாக்கு ஏற்றுமதியும் தடைப்படும் நிலை காணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-6)

# கைதிகளால் இடநெருக்கடி

கொழும்பு, பெப். 15

நாளாந்தம் சிறைச்சாலைகளில் அதிகரிக்கும் கைதிகளின் எண்ணிக்கையால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதுவரையில் சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கம்பஹாவில் மருத்துவமனை

கம்பஹா, பெப். 15

கம்பஹா மாவட்டத்திலுள்ள பியகம நகரில் தனியார் மற்றும் அரச பங்களிப்புடன் தேசிய சிறுவர் மருத்துவமனையொன்று புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ப-6)

# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு 2025இல் வருகின்றது சட்டம்!

## தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

தனிநபர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான விதிமுறைகள் பல உருவாக்கப்படவுள்ளன என்று தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சிக்காக இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. 2025 மார்ச் மாத காலப்பகுதியில் இந்தத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

**நாளை**

16.02.2024

வெள்ளிக்கிழமை

மாசி–04

கார்த்திகை விரதம்

சுபநேரம் : 06.33 - 08.03

ராகுகாலம் : 11.03 - 12.33

**நாளொரு நல்வார்த்தை**


நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்துவை முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை முதல் படி ஏறு

– மார்டின் லூதர் கிங்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராபாவில் தாண்டவம்: 120 பேர் படுகொலை

ஜெருசலேம், பெப். 15
காஸாவின் ராபா பகுதியில் கடந்த இரு நாள்களில் இஸ்ரேல் மேற்கொண்ட பல்வேறுபட்ட தாக்குதல்களால் 120க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீன செம்பிறைச் சமூகம் தெரிவித்துள்ளது. வடக்கு காஸா மற்றும் தெற்குக் காஸாப் பகுதிகளை இஸ்ரேல் குறிவைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## நேட்டோவில் இருந்து அமெரிக்கா விலகும்!

### ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு


**வொஷிங்டன், பெப். 15**
**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், நேட்டோ உறுப்பு நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்போவதில்லை என்று அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**

தெற்கு கரோலினாவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தான் மீண்டும் வெள்ளை மாளிகைக்குச் சென்றால், நேட்டோ அமைப்பில் இருந்து விலகப் போவதாகக் கூறியுள்ள அவர், நேட்டோ அமைப்புக்குப் போதிய நிதியை வழங்காதமைக்காக அதன் ஐரோப்பிய உறுப்பு நாடுகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.
டொனால்ட்ட்ரம்ப்பின் இந்த சர்ச்சைக்குரிய கருத்துக் காரணமாக நேட்டோ அமைப்பின் தலைவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன கடும் குழப்பத்துக்கு உள்ளாகி இருப்பதாகக் கூறப்படுகிறது. (ம)

## விவசாயிகளின் போராட்டத்தில் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்



புதுடில்லி, பெப். 15
இந்தியாவில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 200க்கும் மேற்பட்ட விவசாய அமைப்புகள் மேற்கொண்டுவரும் பேரணி ஹரியாணா எல்லையில் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மீது ட்ரோன்கள் மூலம் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டுத் தாக்குதல் நடத்தப்படுவதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.
'டில்லி சலோ' என்ற பெயரில், புதுடில்லியை நோக்கி இடம்பெற்றுவரும் இந்தப் பேரணி பஞ்சாப்பில் இருந்து நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. விவசாயிகளின் பேரணிக்கு புதுடில்லி மாநில அரசு தனது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது. பேரணி புதுடில்லியை அடைந்தால் அங்கு உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் விவசாயிகளின் போராட்டம் எழுச்சியுறும் என்று கருதப்பட்ட நிலையில், ஹரியானா எல்லையில் விவசாயிகளின் போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ம)



இங்கிலாந்தில் ஆயிரத்து 700 ஆண்டுகள் பழமையான கோழி முட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முட்டையில் மஞ்சள் கருவும் வெள்ளைக் கருவும் இன்னமும் இயற்கையாக பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் வியந்துள்ளனர். (ச)



## பாக். பிரதமராக ஷெபாஸ் ஷெரீப்

இஸ்லாமபாத், பெப். 15
பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி நீடித்து வருகின்றது.
இந்நிலையில், நவாஸ் ஷெரீப் பிரதமராகப் பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், எவரும் எதிர்பாரா விதமாகப் பிரதமர் பதவிக்குத் தனது சகோதரரான ஷெபாஸ் ஷெரீப்பை முன்மொழிந்துள்ளார் நவாஸ் ஷெரீப்.
இதையடுத்து, நவாஸ் ஷெரீப் தரப்புக்கு வெளியில் இருந்து ஆதரவளிப்பதாக பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிவித்துள்ளது. (ம)



## செவ்வாயில் குடியேற எலான் மஸ்க் வியூகம்

வொஷிங்டன், பெப். 15
எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்தில் மனிதனைக் குடியேற்றும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக உலக பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.
ஒரு மில்லியன் மக்களை செவ்வாய்க் கிரகத்துக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்ற சூழலை அங்கு உருவாக்கும் திட்டத்தை அவரது நிறுவனமான 'ஸ்பேஸ் எக்ஸ்' உருவாக்கி வருவதாக அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். பூமியில் இருந்து விநியோகம் தடைப்பட்டாலும் செவ்வாய்க் கிரகத்தில் வாழும் மக்கள் பிரச்சினையின்றி வாழமுடியும் என்றும் எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கருணைக்கொலையிலும் கரம்கோர்த்த தம்பதியர்

ஆம்ஸ்ரெர்டாம், பெப். 15
நெதர்லாந்தின் முன்னாள் பிரதமரும் அவருடைய மனைவியும் கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளனர். மரணத்தின்போதும் இணைபிரியக்கூடாது என்ற அவர்களின் 70 ஆண்டுகால விருப்பம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



பழைமைவாதம் வேரூன்றிய முதுபெரும் அரசியல்வாதியான நெதர்லாந்தின் முன்னாள் பிரதமர் ட்ரைஸ் வான் பல்வேறு தாராளவாத காரணங்களுக்காகப் பிரசாரம் செய்தவர். நெதர்லாந்தின் பிரதமராக மட்டுமல்லாது ஜப்பான் மற்றும் அமெரிக்காவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவராகவும் பணியாற்றியுள்ளார். 2019ஆம் ஆண்டு அவருடைய மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. சிகிச்சை எதுவும் பயனளிக்காத நிலையில் அவர் தன்னைக் கருணைக்கொலை செய்துவிடுமாறு அரசிடம் விண்ணப்பித்தார். தனது கணவன் இல்லாத வாழ்க்கை தனக்கு சாத்திமற்றது என்றும் அந்த வாழ்க்கையை தான் வெறுப்பதாகவும், தனது வயதைக் கருத்திற்கொண்டு தன்னையும் கருணைக்கொலை செய்யுமாறு அவரின் மனைவியும் கருணைக்கொலைக்கு விண்ணப்பித்தார்.
இவர்கள் இருவருடைய கோரிக்கையையும் அதிலுள்ள தாற்பரியங்களையும் கவனத்திற்கொண்ட நெதர்லாந்து அரசாங்கம் அவர்கள் விருப்பப்படியே இருவரையும் ஒரேநேரத்தில் கருணைக்கொலை செய்துள்ளது. (ம)

## நேசநாடுகளுக்காக 95.34 பில். டொலர்

வொஷிங்டன், பெப். 15
யுத்த நடவடிக்கை காரணமாகப் பாதிப்படைந்துள்ள தனது நேச நாடுகளுக்கு உதவும் வகையில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட்சபை 95.34 பில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.
போர் காணமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவவேண்டியது அமெரிக்காவின் கடமை என்ற அடிப்படையில் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உர இறக்குமதியில் ஊழல் மோசடிகள்!

பலரைக் கைதுசெய்ய நடவடிக்கை

**கொழும்பு, பெப். 15**

**விவசாயிகளுக்கு மானியமாக வழங்குவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தை, விவசாயிகளுக்கு வழங்காமல் 100 கோடி ரூபா வரையில் மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் சிலரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

பல்வேறுபட்ட உர நிறுவனங்களிலும் முக்கியமான பதவிகளை வகிக்கும் பத்துப் பேர் இவ்வாறு விசாரணை வளையத்துக்குள் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண் அதிகாரிகள் சிலரும் உள்ளடங்குகின்றனர்.

2018ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த மானிய உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் ஹொரனை, கேகாலை, மாதம்பை பிரதேசங்களில் உள்ள பிரதான கைத்தொழில்துறை நிறுவனங்களுக் குப்பல்வேறு மோசடி முறைகளில் அதிக விலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நீரில் மூழ்கி இருவர் பலி!

திருகோணமலை, பெப். 15

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு பகுதியைச் சேர்ந்த இருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சிறியால் ஓடைப் பகுதியில் இந்தத் துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. ஆயிஸ் ரூபன் (வயது -17), புஷ்பகுமார் (வயது -42) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். (ம)

சுழிபுரம் ஆலயப் பிணக்கு விவகாரம்

## உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது போராட்டம்



ஆலயப் பிணக்கு ஒன்றைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் வே.சச்சிதானந்தம், அகில இலங்கை சைவ மகாசபை மற்றும் தமிழ் சைவ பேரவை வழங்கிய உறுதிமொழியை அடுத்து தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

சுழிபுரம் மத்தி கறுத்தனாந்தோட்டம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்க்க வேண்டும் என்று தெரிவித்து கடந்த திங்கட்கிழமை முதல் இவர் போராட்டத்தை முன்னெடுத்து வந்தார்.

ஆலய முரண்பாடு தொடர்பாக வலி. மேற்குப் பிரதேச செயலரிடம் முறையிட்டேன். கடந்த டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி ஆலயக் கூட்டம் நடைபெறும் என்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் துண்டுப்பிரசுரம் ஒட்டினர். பின்னர் ஆலயம் பதிவுசெய்யப்படவில்லை எனக் கூறி கூட்டம் நடத்தப்படவில்லை. பின்னர் பிரதேச செயலாளர் இரு தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடினார். இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத காரணத்தால் இந்த விடயத்தில் தாம் தலையிடமுடியாது எனக் கூறி இணக்கமன்றுக்குச் செல்லுமாறு வழிப்படுத்தினார். எதிர்த்தரப்பு இணக்க மன்றுக்கு னள காரணத்தால் தீர்வைக் காண முடியவில்லை. இதனாலேயே உண்ணாவிரதம் இருக்கின்றேன் என்று அவர் தெரிவித்திருந்தார்.

நேற்றுக்காலை தமிழ் சைவப் பேரவையின் தலைவரும் ஓய்வு நிலை நீதிபதியுமான வசந்தசேனன், அகில இலங்கை சைவ மகாசபை பொதுச்செயலர் பரா நந்தகுமார், பொருளாளர் அருள் சிவானந்தன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களான ஜெயந்தன், உமாபதி, கிராம அலுவலர்கள், பிரதேச வாசிகள் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். பிரதேச செயலர் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி கூட்டமொன்றை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி வழங்கியதை அடுத்து உண்ணாவிரதத்தை சச்சிதானந்தம் கைவிட்டார். (ஏ-125)

# மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடவடிக்கை தேவை

பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 15

உமையாள்புரத்தில் தொடரும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக உமையாள்புரத்தில் மணல் அகழ்வு தொடர்கின்றது. இது தொடர்பாக கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பல தடவைகள் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

சில வேளைகளில் பொலிஸார் நடவடிக்கைகளில் இறங்கும் தகவல், மணல் கடத்தல்காரர்களுக்குத் முற்கூட்டியே தெரிந்து விடுவதால் கடத்தல்காரர்கள் இலகுவாக தப்பித்துக் கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-13)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், பெப்.15

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 021 222 2393, 0776692657, 077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

**வேலைக்கு ஆள் தேவை (பெண்)**

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை.

- வயதெல்லை 30 தொடக்கம் 40 வரைக்கும்
- வேலைநேரம் காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**074 123 5110**

(CS 27887) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 07 . 1944



மறைவு 11 . 02 . 2024

### சறோஜினி இராஜநாதன்

நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், 130,கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜினி இராஜநாதன் கடந்த (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜநாதனின் அன்பு மனைவியும், இராஜசுரேஷன் (குமார் - பிரான்ஸ்), இராஜபாலன் (பிரான்ஸ்), இராஜசேகர் (சுவிஸ்), இராஜலக்ஷ்மன் (லக்கி - பிரான்ஸ்), நிரோஷானந் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோமதி, பிரியதர்ஷினி, தர்மினி, வதனவாணி, அகலிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.02.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

130, கச்சேரி நல்லூர் வீதி

தகவல்:
பிள்ளைகள்.
077 707 8292

(CS / 53978) 4/20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித யாகப்பர் ஆலய புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றம் நடத்திய கலைவிழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் ஒழுங்குபடுத்தலில், இளையோர் மன்றத் தலைவர் விக்டர்குமார் சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ கற்கைகள் விரிவுரையாளர் அருட்பணி ம.வி. இரவிச்சந்திரன், குருநகர் சுகாதார மேம்பாட்டு மைய ஆலோசகர் ஜயாத்துரை சந்திரன், யாழ். புனித மரியாள் வித்தியாலய அதிபர் கெனத் மேரியன், புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஓய்வு நிலை உப அதிபர் திருமதி யூஜின் யூலியஸ், யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலய ஆசிரியர் யூடா சதீஷ்குமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். (ய-27)




புதிதாக அமைக்கப்பட்ட உபஅஞ்சல் அலுவலகம் நீர்வேலியில் கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது. வடக்கு மாகாண அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தபாலகக் கட்டடத்தைத் திறந்தார். நிகழ்வில் தபாலக அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-17)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் மட்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 096 9728

(CS/53976)


## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை உறுப்பினர்

**ந. இந்திரகுமார்**

அவர்களின் பாசமிகு தாயார்

# நவரத்தினம் ரூபவதி

அவர்கள் இறைபதம் அடைந்தார் எனும் செய்தி அறிந்து அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா அம்பாள் திருப்பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 04 . 1936



மறைவு
14 . 02 . 2024

# Dr. செல்வவிநாயகம் முத்துக்குமாரசாமி

(ஓய்வு பெற்ற வைத்தியர்)

உடுப்பிட்டி கும்பவாழியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வவிநாயகம் முத்துக்குமாரசாமி நேற்று (14.02.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிஅம்மையின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.02.2024) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளம்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CK (41814)

தகவல்:
குடும்பத்தினர்


## பராமரிப்பாளர் தேவை

62 வயது உடைய பெண் ஒருவரை வீட்டில் தங்கிநின்று பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இடம்:- இணுவில் கந்தசாமி கோவிலடி
இணுவில்

தொடர்பு: 077 044 0155

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி நுணாவில் பேச்சி அம்மன் கோவிலடியில் இருந்து 300 m தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

077 224 7902

## நல்லூர் தெற்கு சனசமூக நிலைய
# பவள விழாவையொட்டி
## திறந்த நாடகப் போட்டி

75 பவளவிழா 1949 2024

**எப்பகுதியில் இருக்கும் நாடகக்கலைத்துறைசார் ஆர்வலர்களும் விருதுகளையும் பெறுமதியான பணப்பரிசில்களையும் தட்டிக்கொள்ளும் இனிய வாய்ப்பு!**

- வயது வேறுபாடின்றி ஒரே குழுக்களாக பங்குபற்றலாம்.
- நேரம் 25-30 நிமிடங்கள்

பதிவுகள் யாவும் இலவசம்

* அரசியல், மதம் சார்ந்த விழுமியங்களை விமர்சிக்காத வகையில் சமூக விழிப்புணர்வை விதைக்கும் கதை கருப்பொருளை கொண்டமைந்த நாடகமாக அமைதல் வேண்டும்.
* பங்குபற்றும் நடிகர்கள் எண்ணிக்கை - 5 முதல் 12 வரை அமையலாம்.
* இவ் ஆற்றுகையானது முன்னர் எப்போதும் போட்டிகளில் கலந்து கொள்ளாத ஆற்றுகையாக அமைய வேண்டும்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

கீழே உள்ள மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ, தொலைபேசி இலக்கங்கள் மூலமாகவோ தொடர்பு கொண்டு இம்மாதம் 29.02.2024 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

நேரடியான பதிவுகள் 25.02.2024 அன்று காலை 9.00 மணிமுதல் நிலைய மண்டபத்திலும் இடம்பெறும்.

மின்னஞ்சல் முகவரி: kugendren@gmail.com


தொலைபேசி இலக்கங்கள்: 077 838 4501, 077 3957 537

உங்கள் பங்குபற்றுதலின் கனதியால் எங்கள் பவளவிழா சிறக்கட்டும்!

பவள விழா நிர்வாகம் - நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்


## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 06 . 1947



மறைவு
05 . 02 . 2024

# கைலாசப்பிள்ளை தர்மகுலசிங்கம்

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Stolberg Aa Chen ஐ வதிவிடமாகவும் கொண்ட கைலாசப்பிள்ளை தர்மகுலசிங்கம் அவர்கள் கடந்த (05.02.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரட்ணம் - அன்னலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சற்குணவதியின் அன்புக் கணவரும், கபிலன், சர்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கற்றிக்காவின் அன்புப் பேரனும், கருணாகரன், மாங்கையற்கரசி, வரதாம்பிகை ஸ்ரீதரன், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2024) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


லோகேஸ்வரி சத்தியசீலன் (அரியாலை)
074 374 3839

(Cs53977) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25.04.1950

உதிர்வு
26.02.2023

## அமரர் சின்னத்துரை நடராசா

**திதி : மாசி சஷ்டித்திதி பூர்வபக்கம்**

எங்களின் அன்புத் தெய்வமே அப்பா!
எங்களை விட்டு பிரிந்து இன்றோடு
ஆண்டு ஒன்று உருண்டோடி மறைந்தாலும்
எங்கள் அப்பாவின் அன்பு முகம்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

அன்போடும் பாசத்தோடும் எமை அரவணைத்த
எங்கள் அன்புத் தந்தையே!
தாங்களின் பிரிவுதனை தாங்கமுடியாமல்
ஏங்கித்தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.**

(CS 27912) A

A-1

# ஆழ்ந்த இரங்கல்கள்

(CS 27905) S-1

தோற்றம்
02.11.1943

மறைவு
10.02.2024


## Dr.பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வு நிலை சிரேஸ்ட விரிவுரையாளர்,
சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம்
ஆழ்ந்த இரங்கல்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.**



**விஜிதா அரிசி ஆலை,**
**பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி. அமிர்தலிங்கம் தங்கமணி (குஞ்சு)

கைதடி தென்கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தலிங்கம் தங்கமணி (குஞ்சு) அவர்கள் நேற்று (14.02.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதியியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நேசரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், மயில்வாகனம் அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், கோண்டாவில் சாலை, இலங்கைப் போக்குவரத்து சபை) அவர்களின் அன்பு மனைவியும், பிரியதர்சினி, தபீசன் (சுவிஸ்), அகீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கபிலேந்திரன் (ராஜா - அனுஷ் அன்ட் நரேன் டீசல் எஞ்சினியர்ஸ் மற்றும் PD Automart யாழ்ப்பாணம்), கஜானா (சுவிஸ்) ஆகியோரின் நேசமிகு மாமியாரும், அனுஷன், டிரோஜன், பிரீத்தி ஆகியோரின் ஆருயிர் அம்மம்மாவும், தங்கராசா, தங்கமலர், புஸ்பராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேந்திரராணி, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 01.30 மணியள்வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தாஜ்மகால்"
கைதடி தென்கிழக்கு, கைதடி.
077 632 7690

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27910) S-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 12 . 1937



இறப்பு 14 . 02 . 2024

### சிவஸ்ரீ வேலாயுதக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்

(மாந்திரிக பூசணம்)

சங்கரத்தை முருகன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள் நேற்று (14.02.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

எல்லோராலும் அன்பாக சங்கரத்தை ஐயா என்றழைக்கப்படும் மாந்திரிக பூசணம் சிவஸ்ரீ வே.இராமலிங்கக்குருக்கள் அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் கோவிலடி,
சங்கரத்தை.


தகவல்:
குடும்பத்தினர்.
077 8096 445

(CR 41816)A-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1951



மறைவு 13 . 02 . 2024

### சபாரத்தினம் நடராசா

(உரிமையாளர் ராஜன் ஆபரணமாளிகை சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் நடராசா (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையா-லட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கராசா, கோகிலராணி, அற்புதராணி, சண்முகராசா மற்றும் நவரத்தினம் கணேசமூர்த்தி, தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ருக்மணிதேவி, இந்திராணி சந்திரஜெயந்தி, ரஞ்சினி, ஜெஸ்மின், காலஞ்சென்ற, நவரட்ணம் கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் சுகந்தன் (Australia), சுபாஜினி (சமுர்த்தி-இலுப்பைக்கடவை), சுகன்ஜா (France), ஜானகி (France), றமணன் (CRESMPA-மாங்குளம்), ஆகியோரின் அன்புத்தந்தையும் . தர்சினி, லிங்கேஸ்வரன், ஜங்கரன், சுரேஸ், தாட்சாயினி (ஆசிரியர் கிளி/விவேகானந்தா வித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கேனிகா, ருசிகா, மதுனிகா, கஜீபன், றோகித், அஸ்வின், நீரூஸ், அஷானி, அஜிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2024) செவ்வாய்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் 8.00 மணியளவில் கிரியைகளோடு ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 700 7474 - மகன்
077 502 7474 - மகள்

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1950



மறைவு 12 . 02 . 2024

### பாலன் தளையசிங்கம்

கைதடி மேற்கினை பிறப்பிடமாகவும் கைதடி தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் தளையசிங்கம் கடந்த (12.02.2024) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலன் - பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தன் - குஞ்சி தம்பதியுரின் மருமகனும், மகாராணியின் பாசமிகு கணவரும், பகீரதன் (சுவிஸ்), வித்தியா (லண்டன்), லக்ஷியா (அபிவிருத்தி உத்தியோகத்தர், முல்லைத்தீவு மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்திஸ்ஸின் பேரனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, ஈஸ்வரி மற்றும் கிருஸ்ணன் (குலசிங்கம் ஸ்ரோர்ஸ், கைதடி மேற்கு), யோகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், கோபால், காலஞ்சென்ற சண்முகநாதன், தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கனகலிங்கம் (சுவிஸ்), கந்தசாமி (சிவம்), சணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரன் (லண்டன்), சாந்தராஜ், சிவகீதன் (லண்டன்), சிவசுதன் (லண்டன்), சுனித்தா (லண்டன்), கீர்த்தீஷன் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், பிரகலாதன் (சுவிஸ்), சாணுயூா, குகேந்தகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடி தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (15.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 420 8071

(CS 27911)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானிய உற்பத்தியாளரை பதிவு செய்ய பணிப்பு

கொழும்பு, பெப்.15

சிறுதானிய உற்பத்தியாளர்களை விவசாயத் திணைக்களத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம் பி.மாலதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சில வியாபாரிகள் சிறு தானியங்களில் கலப்படம் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதால் இலங்கை உற்பத்திகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. எனவே சிறு தானிய உற்பத்தியாளர்கள் விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்து தரச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டு தரமான உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவேண்டுமென அவர் தெரிவித்தார். (ப-6)

## காதலர்...

கூட்டணிக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலையை இலக்காகக்கொண்டே குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது என்று மலையகத் தலைவர்கள் 'உதயனிடம்' தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது மலையகத் தமிழர்களின் வாக்குகளும் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளன. மலையகத் தமிழர்களை மையப்படுத்திச் செயற்பட்டுவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியுடனேயே எதிர்க்கட்சித் தலைவர் உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்காளிக்கட்சியாக இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளையில் தமது ஆதரவு சஜித்துக்கு என்பதை உறுதிப்படுத்தவும், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைந்தால் என்ன நடக்கும் என்ற உத்தரவாதத்தை மக்களுக்கு வழங்கும் வகையிலுமே இந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (அ-எ-44)

## சூழ்ச்சிகளை...

நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கட்சியின் புதிய தலைவர் சி.சிறீதரனிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும், இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அந்தச் சந்தர்ப்பத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத்தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்தி, அன்றையதினமே மாநாட்டையும் நடத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-125)

## வெளிநாட்டு...

யாழ்ப்பாணத்தில் வெளிநாடு அனுப்புவதாகக் கூறிப் பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கனடா அனுப்புவதாகக் கூறியே பெரும்பாலான பண மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பண மோசடிகள் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்தினவின் வழிகாட்டலில், கனேடியத் தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தரவுகள், தகவல்களைப் பெற்றுக்கொண்ட தூதரக அதிகாரிகள், மோசடிச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளனர். (அ-எ-26)

## ரணிலுக்கு...

அதில் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தில் ஏற்படவுள்ள தாக்கம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமெரிக்கா எப்போதும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஆதரளிக்கும் என்றும், இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் டிஜிற்றல் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் சமந்தா பவர்.

இதுதொடர்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு ஜனநாயக ஆட்சிக்கு அரசமைப்புச் சட்டங்களின் அவசியம் தொடர்பாகவும் சமந்தா பவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-6)

## டிசெம்பர்...

நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், இந்த வருடத்துக்கான பாடத்திட்டம் உள்ளிட்ட நடவடிக்கைகளை இந்த வருடத்துக்குள் நிறைவுசெய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளை மே அல்லது ஜூன் மாதம் வெளியிட எதிர்பார்க்கின்றோம்.

அந்தக் காலப்பகுதியில் சாதாரண தரப் பரீட்சையை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்த வருடம் டிசெம்பர் மாதம் 2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையையும் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஜனாதிபதி பெரும் பங்களிப்பு வழங்குகிறார். உலகுக்குப் பொருத்தமான வகையில் கல்வி முறையை மாற்றியமைக்க அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் என்று தெரிவித்தார். (அ-எ-44)

## இ.போ.ச...

ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று ஏ-9 வீதியில் யாழ்ப்பாணம், நாவற்குழிப் பகுதியில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பஸ்ஸே வேகக் கட்டுப்பாட்டை இழந்து அதே திசையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை மோதி வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளானது.

இந்தச் விபத்துச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-66)

## பீடி...

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்து 117 கிலோவுக்கும் அதிக பீடி இலைகள் மற்றும் 150 பூச்சிக்கொல்லி மருந்துப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. கடத்தலுக்குப் பயன்படுத்திய இரு டிங்கிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர். (அ-எ-213)

## பிரபுக்களை...

விஜயகுமாரதுங்க, ரோஹண விஜேவீர, ரணசிங்க பிரேமதாஸ, வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோரே பிரபுக்கள் அல்லாதவர்கள். இதைக்கூறுவதால் என்னை விமர்சிக்கக்கூடும். இது எனது கருத்து, எனது கருத்தை வெளிப்படுத்துவதற்கு நான் என்றும் தயங்குவதில்லை. சமூகம் ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் எனது கருத்தை கூறுவதற்கு முதுகெலும்பு இருக்கவேண்டும்.

எனது வாழ்க்கைக் காலத்தில் இந்த நான்கு தலைவர்களும், பிரபுக்களின் ஆதிக்கத்துக்கு எதிராகவே கிளர்ந்தெழுந்தனர்.

போராட்டத்தின் ஆரம்பம் அது. எனினும், இவர்களின் போராட்டம் ஆரம்பத்தில், இடையில் அழிவை நோக்கிச் சென்றது. அவர்களும் அழிவடைந்தனர், நாடும் அழிவடைந்தது, ஜனநாயகம்கூட அழிவடைந்தது.

இவர்கள் நால்வரும் கொல்லப்பட்டனர். பிரபுக்களுக்கு என்ன நடந்தது? மக்களின் தோள்களில் அவர்கள் சுடுகாடு சென்றனர். இதுதான் வரலாறு - என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-44)

## வேட்டைக்குச்...

என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபர் சிலருடன் காட்டுப் பகுதிக்கு வேட்டைக்குச் சென்றபோது கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில், அவருடன் கூடச் சென்றவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-19)

## தேர்தல்...

முடிவும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்று நான் எப்போதும் கூறுகின்றேன். ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதன் மூலம் தற்போதுள்ள அரசமைப்பை நடைமுறைப்படுத்தமுடியாது. அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்படவேண்டும்.

மாகாணசபை முறை, உள்ளூராட்சி முறை, ஆளுநர்களின் அதிகாரங்கள் ஜனாதிபதி பதவியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அரசியலைப் படித்து நாட்டின் எதிர்காலத்துக்கான முடிவுகளை எடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு நாட்டைப்பற்றி முடிவெடுக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-எ-44)

## தேர்தலுக்கு...

தேர்தலுக்காக (ஜனாதிபதி) 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உரிய காலப் பகுதிக்குள் தேர்தலை நடத்துவதில் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படாது. நாட்டின் நிதி நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. 2025ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு அடுத்த பாதீட்டில் நிதி ஒதுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-44)

## வாகனத்தில்...

இந்த விபத்தில் சிக்கி குறித்த வாகனத்தில் பயணித்த இளந்தொழிலதிபரான ஆனந்தராசா சுதாகரன் (வயது - 32) என்பவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தார். அவரது 3 மாதப் பெண் குழந்தையான அப்சரா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளது.

இணுவில், காரைக்கால் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து நடந்துள்ளது. ரயில் வருவதைக் கவனிக்காது ரயில் கடவையை வாகனம் கடக்க முயன்றபோது, நடுவே வாகனத்தின் இயந்திரம் செயலிழந்தது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். வாகனத்தை மோதிய ரயில் சிறிது தூரம் வாகனத்தை இழுத்துச் சென்றுள்ளது. அதில் வாகனம் உருக்குலைந்தது.

வாகனத்தைச் செலுத்திச்சென்ற இளந்தொழிலதிபரான குடும்பத்தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மனைவியும், 3 மாதக் குழந்தையும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் குழந்தை உயிரிழந்தது. மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்தவரின் மனைவி சேர்க்கப்பட்டுள்ளார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் திரண்ட பொதுமக்கள் பாதுகாப்பற்ற ரயில் கடவையே விபத்துகளுக்குக் காரணம் என்று தெரிவித்து எதிர்ப்பு வெளியிட்டனர். (அ-எ-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகலம் பொருத்தக்கூடியவாறு வீடுகள் அமைக்கப்படவேண்டும்

## துறைசார் மேற்பார்வைக்குழுவில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 15**

**புதிய வீடுகளை நிர்மாணிக்கும்போது சூரிய கலங்களைப் பொருத்தக்கூடிய இட அமைவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று துறைசார் மேற்பார்வைக் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் கூடியது.

புதிய வீடொன்றை நிர்மாணிக்கும்போது அதில் சூரியப் படலங்களைப் பொருத்துவதற்கான இடத்தைத் திட்டமிடுவது குறித்து குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது சூரியக் கலங்களைப் பொருத்தக்கூடிய இடஅமைவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மின்சாரப் பாவனையைக் குறைப்பதற்காக எல்.ஈ.டி. மின்விளக்குகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ச-இ)

## மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி!

கொக்குவில், சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையேநடத்தும் பேச்சுத்திறன் போட்டி கொக்குவில் பிரம்படியிலுள்ள கொக்குவில் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, திறந்த பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள போட்டியில் ஜே/123 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தரம்- 3 முதல் க.பொ.த. உயர்தரம் வரையிலான மாணவர்கள்மட்டும்பங்குபற்ற முடியுமென தெரிவித்துள்ளனர். பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 22ஆம் திகதிவரைவிண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)



## நெல் அறுவடை!

யாழ்ப்பாணம், பெப். 15

சுழிபுரம் மேற்கு, திருவடிநிலைப் பகுதியில் நெல் வயலாக மாற்றப்பட்ட தரிசு நிலக் காணியில் அண்மையில் பொதுமக்களால் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு ஜே/172 கிராம அலுவலர் பிரிவில் கடந்த 2020ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட திருவடிநிலை மீள்குடியேற்றப் பகுதியிலுள்ள 60 ஏக்கர் தரிசு நிலக்காணி சுழிபுரம் மேற்கு வாழ் பொதுமக்கள், புலம்பெயர் தேசத்தவர்கள், கலைமகள் விளையாட்டுக் கழகத்தினர் ஆகியோரால் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு நெல் வயலாக மாற்றப்பட்டது. இந்தக் காணியிலேயே அண்மையில் அறுவடை முன்னெடுக்கப்பட்டது. (ப-125)

## யாழ். ப.நோ.கூ.சங்க கிளைக்குழுத் தேர்தல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 31 நிலையங்களில் மு.ப. 10 மணிக்கு இந்தத் தேர்தல் இடம்பெறும். சகல அங்கத்துவ வாக்காளர்களும் சமுகமளித்து கிளைக்குழு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு சங்க வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ச-17)

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், பெப். 15

சுழிபுரம் பகுதியில் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய சுழிபுரம் பாண்டவெட்டைப்பகுதியில் வைத்துசந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரின் உடைமையில் 440 மில்லிகிராம் ஹெரோய்ன் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-125)

## கசிப்புடன் ஒருவர் கைது!

சுழிபுரம் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார், சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த இளைஞரை வழிமறித்துச் சோதனையிட்டபோதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-125)



இந்திய தேசிய யோகா கூட்டமைப்பு, ஆசிய யோகா சம்மேளனம் மற்றும் கொழும்பு சைவ விஷ்ணு யோக பீடம் இணைந்து கொழும்பில் சர்வதேச யோகாப் போட்டியொன்றை கடந்த சனிக்கிழமை நடத்தின. போட்டியில் பாடப்பரப்புக்குட்பட்ட யோகாப் பிரிவில் யாழ்.மிருசுவில் படித்த மகளிர் திட்டம் பகுதியைச் சேர்ந்த யாழ். யோகா உலகம் அமைப்பின் நிறுவு நரும், யோகாப் போதனாசிரியருமான சி. உமாசுதன் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (ப-66)


**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் வீடு மற்றும் கடை விற்பனைக்குண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

(CS/53976) (2.4)

தொடர்பு:- 077 710 9016

**வேலையாட்கள் தேவை**

கடை ஒன்றிற்கு கணனி தொடர்பான அறிவுள்ள முகாமையாளரும், விற்பனைப்பிரதிநிதிகள் மூவரும் வேலைக்குத் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**முகாமையாளருக்கு சுமார் 60,000 ரூபாவும், விற்பனைப் பிரதிநிதிக்கு 45,000 ரூபாவும்** சம்பளமாக வழங்கப்படும்.

076 586 4967,070 606 5504

**காணி விற்பனைக்கு**

**புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**
1 பரப்பின் விலை 2 1/2லட்சம்.
180 பரப்பில் - 51 பரப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
**பார்வையிடும் நேரம்:**
காலை: 8.30 - மாலை 6.00
தொடர்புகளுக்கு:
076 659 0583
074 260 0617
076 109 8504

(cs.27866) (N-1)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 31 . 07 . 1945



மறைவு 16 . 01 . 2024

**அமரர் சொர்ணாம்பிகை பரமேஸ்வரன்**

கடந்த 16.01.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.02.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (17.02.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரை இழந்து ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருந்த எமக்கு பல வழிகளிலும் ஆறுதல் தந்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பெரிய மதவடி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

(cs.27888) (N-1)

குடும்பத்தினர்


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org